Downloaded from:-www.paritchai.com

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

எம். சாஹிர் சேர்

அறிவுமதி 5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL - 2019

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2019

வினாத்தாள் இல. 7

# வினாத்தாள் I

2019.06.13 / 09:30 - 10:15

45 நிமிடம்

சுட்டெண் :.......................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T/EMF |
| **பிரதான பரீட்சகர்** மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும். | V/I/T/CH |


[பக். 2 ஐப் பார்க்க


Downloaded from:-www.paritchai.com


Downloaded from:-www.paritchai.com




● **1, 2** ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவுசெய்க.


**1.** 



(1)



(2)


(3)


**2.** 



(1)



(2)



(3)


● **3, 4** ஆகிய வினாக்களில் ஓர் உரு ஏனைய இரு உருக்களிலிருந்தும் வேறுபடுகின்றது. வேறுபடும் உருவைத் தெரிவுசெய்க.


**3.** 
(1)


(2)


(3)

**4.** 
(1)


(2)


(3)

● **5, 6** ஆகிய வினாக்களில் உள்ளவற்றிடையே **மூன்றை** ஒரு கூட்டமாகவும் **இரண்டை** வேறொரு கூட்டமாகவும் ஆக்கலாம். அவற்றில் **இரண்டு** இருக்கும் கூட்டத்திற்கு உரியவை யாவை ?

**5.** கரட், ரம்புட்டான், மங்குஸ்தான், லீக்ஸ், மரமுந்திரிகை

(1) கரட்டும் மங்குஸ்தானும்
(2) ரம்புட்டானும் மரமுந்திரிகையும்
(3) லீக்ஸும் கரட்டும்

**6.** காற்பந்து, ஹொக்கி, சதுரங்கம், கிறிக்கெற், கரம்

(1) சதுரங்கமும் கரமும்
(2) ஹொக்கியும் சதுரங்கமும்
(3) காற்பந்தும் கிறிக்கெற்றும்

[பக். 3 ஐப் பார்க்க


Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



சுட்டெண் :.................................................

● பிள்ளைகள் சிலர் பொழுதுபோக்குகளில் ஈடுபடும் விதம் உருவில் உள்ளது. அதனைக் கொண்டு 7, 8 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.




**7.** மூன்று பொழுதுபோக்குகளிலும் ஈடுபடும் பிள்ளை யார் ?

(1) ரவி (2) முரளி (3) கீதா

**8.** இரண்டு பொழுதுபோக்குகளில் மாத்திரம் ஈடுபடும் பிள்ளைகள் யாவர் ?

(1) சங்கவி, மீனா, சேகர்

(2) கண்ணன், கீதா, குமார்

(3) குமார், ரவி, கீதா

**9.** பணம் இல்லாது கஸ்டப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு நண்பன் ஒருவன் தன்னிடமிருந்த பணத்தில் ஒரு பகுதியைக் கொடுத்தான். இதற்குப் பொருத்தமான பழமொழி யாது ?

(1) உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

(2) உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.

(3) அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்.

**10.** இலைமறை காய் போல் என்பதன் கருத்தை விளக்கும் கூற்று யாது ?

(1) தேவையானபோது உதவுதல்

(2) திறமை மறைந்து இருத்தல்

(3) மிகத் தெளிவாகத் தெரிதல்

**11.** 'சிம்மாசனம்' என்னும் சொல்லில் உள்ள எழுத்துக்களைக் கொண்டு ஆக்கத்தக்க கருத்துள்ள சொல்

(1) சினம் (2) மாதம் (3) மனம்

**12.** கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசிக்க.

கந்தசாமி வீடு ஒன்றைக் கட்ட விரும்பினார். அவரது நண்பர்கள் △1 முன்வந்தனர். அவர் மகிழ்ச்சியடைந்தார். உடனடியாகவே வீடு கட்டுவதற்கான வேலைகளை ஆரம்பிக்க எண்ணினார். அவர் வீடு கட்டப்போவதை அறிந்த சிலர் △2 அடைந்தனர்.

பந்தியில், △1, △2 ஆகிய இடங்களுக்கு மிகவும் பொருத்தமான மரபுத்தொடர்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவுசெய்க.

(1) முகம்கொடுக்க, அறைகூவுதல்

(2) தோள்கொடுக்க, வயிற்றெரிச்சல்

(3) கைகொடுக்க, புண்படுத்தல்



Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com




**13.** 4 ✤ 3 = 7 ✶ 5 என்னும் கணிதத் தொடர்புடைமையில் ✤, ✶ என்னும் குறியீடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள இரு கணிதச் செய்கைகளும் யாவை ?


(1) × உம் + உம் (2) − உம் ÷ உம் (3) × உம் − உம்


**14.** 20 தொடக்கம் 30 வரை எண்களை எழுதும்போது இலக்கம் 2 எத்தனை தடவைகள் எழுதப்படல் வேண்டும் ?


(1) 9 (2) 10 (3) 11


**15.** உரு A இல் காட்டப்பட்டுள்ள கடதாசிக்கீற்றை இரண்டாக மடித்து மறுபடியும் இரண்டாக மடித்து எல்லாக் கடதாசிப் பகுதிகளும் அடங்குமாறு உரு B இல் உள்ளவாறு துளைகளை இட்டு முற்றாக விரிக்கும்போது கிடைக்காத உரு யாது ?


உரு A



உரு B



(1)



(2)


(3)

**16.** சேகர் தனது வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்வதற்கு முதலில் வடக்குத் திசை நோக்கிச் சென்று பின்னர் அங்கிருந்து தென்மேற்குத் திசையில் சென்று பின்னர் அங்கிருந்து மேற்குத் திசை நோக்கிச் சென்று பாடசாலையை அடைந்தான். சேகரினது பயணப் பாதையைத் தெரிவுசெய்க.


(1)


(2)


(3)

**17.** சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் ஒழுங்கில் அமைந்த வடிவங்களைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.

(1) சதுரம், செவ்வகம், சமபக்க முக்கோணி, வட்டம்

(2) செவ்வகம், சமபக்க முக்கோணி, சதுரம், வட்டம்

(3) வட்டம், சமபக்க முக்கோணி, சதுரம், செவ்வகம்

**18.** ஒரு நோயாளிக்கு வைத்தியர் 8 மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை மருந்து அருந்துமாறு கூறினார். இதன்படி அவர் மு.ப. 7.00 இற்கு மருந்து அருந்தினால், அந்த நாளில் அவர் மருந்து அருந்த வேண்டிய அடுத்த இரண்டு நேரங்களையும் தெரிவுசெய்க.

(1) பி.ப. 3.00 உம் பி.ப. 11.00 உம்

(2) பி.ப. 3.00 உம் மு.ப. 3.00 உம்

(3) ந.ப. 12.00 உம் மு.ப. 11.00 உம்


[பக். 5 ஐப் பார்க்க


Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com







● **19, 20** ஆகிய வினாக்களில் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**19.**  இற்கு  எனின், ...................... இற்கு  ஆகும்.



(1) (2) (3)

**20.**  இற்கு  எனின், ...................... இற்கு  ஆகும்.



(1) (2) (3)

● பின்வரும் தகவல்களைக் கொண்டு **21, 22** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

| விளாம்பழம் - 1<br>மாதுளம்பழம் - 2 | விலை ரூ. 265 |
|---|---|
| **விளாம்பழம் - 2<br>மாதுளம்பழம் - 3** | **விலை ரூ. 410** |

**21.** விளாம்பழம் 1 இனதும் மாதுளம்பழம் 1 இனதும் விலை எவ்வளவு ?

(1) ரூ. 145 (2) ரூ. 170 (3) ரூ. 185

**22.** விளாம்பழம் 3 இனதும் மாதுளம்பழம் 5 இனதும் விலை எவ்வளவு ?

(1) ரூ. 530 (2) ரூ. 650 (3) ரூ. 675

**23.** பாதை ஒன்றை அமைப்பதற்கு 4 மனிதர்களுக்கு 10 நாட்கள் தேவை என கணக்கிடப்பட்டுள்ளது. இதே வேலையை 8 மனிதர்களைப் பயன்படுத்தி எத்தனை நாட்களில் நிறைவு செய்யலாம் ?

(1) 3 நாட்கள் (2) 5 நாட்கள் (3) 6 நாட்கள்

**24.** ஒரு பரீட்சை மண்டபத்தில் 20 மாணவர்களை மாத்திரமே பரீட்சை எழுதுவதற்காக அமர்த்த முடியும். அவ்வாறு இருக்கத்தக்கதாக 122 மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்காக தயார்படுத்தப்பட வேண்டிய பரீட்சை மண்டபங்களின் எண்ணிக்கை யாது ?

(1) 5 (2) 6 (3) 7


[*பக். 6 ஐப் பார்க்க*

Downloaded from:-www.paritchai.com


Downloaded from:-www.paritchai.com



**25.** பின்வரும் உருக்களில் உள்ள எண் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவுசெய்க.




(1) 28 (2) 30 (3) 36

**26.** 


இவ்வுருவில் ஆறு பக்கங்களும் 1, 2, 3, 4, 5, 6 எனக் குறிக்கப்பட்டுள்ள ஒரு தாயக்கட்டையின் மூன்று நிலைகள் உள்ளன.

மேற்குறித்த தாயக்கட்டையின் 4 எனக் குறிக்கப்பட்டுள்ள பக்கத்திற்கு எதிரேயுள்ள பக்கத்தைக் காட்டும் எண் யாது ?

(1) 1 (2) 2 (3) 6

**27.** A – பத்துப் பயறு வீசுவதால் ?

B – கொஞ்சம் கிள்ளி எறிகின்றேன்


C – கொத்திக் கொத்தித் தின்கிறது

D – பஞ்சம் வந்து சேர்ந்திடுமோ


மேலேயுள்ள கவிதையின் வரிகள் ஒழுங்கின்றி எழுதப்பட்டுள்ளன. அர்த்தமுள்ள கவிதையாக அமையுமாறு ஆங்கில எழுத்துக்களைப் பொருத்தமாக ஒழுங்குபடுத்துக.

(1) ADBC (2) BCAD (3) CBAD

● **28, 29** ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை அம்புக்குறி காட்டும் திசையிலிருந்து பார்க்கும்போது தோற்றும் விதத்தைத் தெரிவுசெய்க.

**28.** 

(1) (2) (3)

**29.** 

(1) (2) (3)

**30.** மிருகக்காட்சி சாலைக்குச் சென்ற மாணவன் ஒருவன் அங்கு தான் 50 தலைகளையும் 130 கால்களையும் பார்த்ததாகக் கூறினான். அவன் பார்த்த பறவைகளின் எண்ணிக்கையும் மிருகங்களின் எண்ணிக்கையும் யாவை ?

(1) பறவைகள் 35, மிருகங்கள் 15

(2) பறவைகள் 30, மிருகங்கள் 20

(3) பறவைகள் 25, மிருகங்கள் 25

[பக். 7 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com




**31.** செவ்வக வடிவான மரக்கறித் தோட்டம் ஒன்றின் நீளம் 12 மீற்றரும் அகலம் 6 மீற்றரும் ஆகும். அதன் எல்லை வழியே 2 மீற்றர் இடைத்தூரங்களில் தூண்கள் நடப்பட்டுள்ளன. அவ்வாறு நடப்பட்டுள்ள தூண்களின் எண்ணிக்கை யாது ?


(1) 18 (2) 20 (3) 24

**32.** ஒரு நிரையில் உதயன் தொடக்கத்திலிருந்து 9 ஆவதாக நிற்கின்றான். அவன் இறுதியிலிருந்து 15 ஆவதாக நிற்கின்றான். அந்நிரையில் எத்தனை நபர்கள் நிற்கின்றனர் ?


(1) 22 (2) 23 (3) 24

**33.** பின்வரும் உருவில் உள்ளவாறான ஒரு வடிவத்தைக் கோடு AB வழியே இரண்டாக மடிக்கும்போது கிடைக்கும் உரு யாது ?




(1)




(2)



(3)

**34.**





A, B, C, D என்னும் நான்கு குழுக்களில் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கைகள் இவ்வுருவில் வகை குறிக்கப்பட்டுள்ளன.
குழு A இல் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை 20 ஆகும். இதற்கு ஏற்ப B, C ஆகிய இரு குழுக்களிலும் உள்ள பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது ?

(1) 10 (2) 15 (3) 20

**35.** நீளம், அகலம், உயரம் ஆகியன முறையே 5cm வீதம் உள்ள ஒரு மரச் சதுரமுகியிலிருந்து நீளம், அகலம், உயரம் ஆகியன 1cm வீதம் உள்ள எத்தனை சிறிய சதுரமுகிகளை வெட்டலாம் ?

(1) 15 (2) 25 (3) 125

**36.** முழு உருவத்தினதும் பரப்பளவு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவின்



(1) இரண்டு மடங்காகும்.
(2) மூன்று மடங்காகும்.
(3) நான்கு மடங்காகும்.

**37.** மல்வானை, கம்பளை, கந்தானை என்னும் சொற்கள் **2109, 2735, 6489** ஆகிய இலக்கங்களைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளன எனில், கந்தானை என்னும் சொல்லை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட இலக்கங்கள் யாவை ?

(1) **2109** (2) **2735** (3) **6489**

**38.** ☆ × ○ = 60 ஆகவும் ☆ − ○ = 4 ஆகவும் இருப்பின், ☆ + ○ இன் பெறுமானம் யாது ?

(1) 15 (2) 16 (3) 17


[பக். 8 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



● ஓர் அடைப்பின் ஒரு பக்கத்தின் நீளம் 10 மீற்றர் ஆக இருக்குமாறு வரையப்பட்டுள்ள ஒரு பாதை நெய்யரி கீழே காணப்படுகின்றது. அதனைக் கொண்டு **39, 40** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.




**39.** மேற்குறித்த பாதை நெய்யரியில் K இலிருந்து D இனூடாக B வரையுள்ள மிகக் குறுகிய தூரம்

(1) 50 மீற்றர் (2) 80 மீற்றர் (3) 100 மீற்றர்

**40.** மேற்குறித்த பாதை நெய்யரியில் இராணி A இலிருந்து K இனூடாக E இற்கும் கண்ணன் E இலிருந்து C இனூடாக A இற்கும் பயணஞ் செய்தனர். இதற்கேற்ப,

(1) இராணியும் கண்ணனும் சம தூரத்திற்கு பயணஞ் செய்துள்ளனர்.

(2) கண்ணன் இராணியிலும் கூடுதலான தூரம் பயணஞ் செய்துள்ளான்.

(3) இருவரும் பயணஞ் செய்துள்ள மொத்தத் தூரம் 190 மீற்றர் ஆகும்.

❋ ❋ ❋

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

எம். சாஹிர் சேர்

அறிவுமதி 5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL - 2019

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2019**

வினாத்தாள் இல. 7

# வினாத்தாள் II

2019.06.13 / 10:45 - 12:00

**1 மணித்தியாலம் 15 நிமிடம்**

சுட்டெண் :.........................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
* **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்து பார்ப்பதற்காகத் தாளொன்று வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T/EMF |
| பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும். | V/II/T/CH |

[பக். 2 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



**1.** பின்வரும் பந்தியை வாசிக்க.

எமது நாட்டின் தேசியக் கொடியில் சிவப்பு நிறப் பின்னணியில் மஞ்சள் நிற வாளேந்திய சிங்க உருவம் சிங்கள மக்களைக் குறிக்கிறது. செம்மஞ்சள் நிறப் பட்டி தமிழ் மக்களைக் குறிக்கிறது. பச்சை நிறப் பட்டி முஸ்லிம் மக்களைக் குறிக்கிறது. முழுக் கொடியையும் சுற்றிவர இடப்பட்டிருக்கும் மஞ்சள் நிறப் பட்டி இனங்களுக்கு இடையிலான ஒற்றுமையையும் கொடியின் முழுமைப்பாட்டையும் குறிக்கிறது. கொடியின் உள்ளேயுள்ள நான்கு அரச இலைகள் இரக்கம், காருண்யம், திருப்தி, பற்றின்மை ஆகிய நான்கு பண்புகளைக் குறிக்கின்றன.

பந்தியை **மாத்திரம்** துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) தேசியக் கொடியில் முஸ்லிம் மக்களைக் குறிக்கும் நிறத்தை எழுதுக. : ..................................

(ii) தேசியக் கொடியின் உள்ளேயுள்ள நான்கு அரச இலைகள் குறிக்கும் **இரண்டு** பண்புகளை எழுதுக.

(1) : ..................................................

(2) : ..................................................

(iii) 'அன்பு' என்பதற்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.

: ..................................

(iv) 'வாளேந்திய' என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக. : ................+..................

(v) 'வேற்றுமை' என்னும் சொல்லின் எதிர்க் கருத்துள்ள சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.

: ..................................

(vi) முழுக் கொடியையும் சுற்றிவர இடப்பட்டிருக்கும் மஞ்சள் நிறப் பட்டி குறித்து நிற்பது எதை ?

: ..............................................................................................................

**2.** பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கரு ,தை எழுதுக.

(i) காது குத்துதல் :...........................................................................................

(ii) நுனிப்புல் மேய்தல் :...........................................................................................

**3.** பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

(i) இலங்கையின் தேசிய மலர் எது

(ii) ஐயோ பாவம் இவன் நல்லவனாயிற்றே

**4.** "என்மீது ஒருவரும் அழுக்காறு கொள்ளார்" என்றான் வீரன்.

இங்கு அழுக்காறு என்னும் சொல்லின் கருத்தை எழுதுக. :................................................

**5.** சரியான **வினைச்சொல்லின்** கீழ்க் கோடிடுக.

(i) சீகிரியா ஓவியங்கள் பழைமை (வாய்ந்தது / வாய்ந்தன)

(ii) அப்பாவுடன் நான் கடைக்குச் (சென்றேன் / சென்றோம்)

**6.** பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியில் எழுதுக.

(i) நான் வீட்ட போறன்.

:..............................................................................................................

(ii) அம்மா சந்தையில் பாவக்காய் வேண்டினார்.

:..............................................................................................................

**7.** பின்வரும் பழமொழியைப் பூர்த்திசெய்க.

உண்ணாச் சொத்து ........................................ போகும்.

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



சுட்டெண் :.............................................................

**8.** தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

இரு / எழுத்தும் / போன்றன / எமது / எண்ணும் / கண்களைப்

..........................................................................................................................................

**9.** சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லின் கீழ்க் கோடிடுக. (இனையம் / இணையம்)

**10.** பேருந்தில் பயணச்சீட்டு வழங்குபவர் (சாரதி / நடத்துநர்)

**11.** பின்வரும் இணைமொழியைப் பூர்த்திசெய்க.

நோய் .....................................

**12.** பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) Agriculture :.......................................... (ii) Library :.......................................................

**13.** பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை, ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(i)  (ii) 

................................. ...................................

**14.** பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.

(i) your / please / book / open :..................................................................................................


(ii) bring / will / I / flowers :..................................................................................................

**15.** (i) 'ஆபன சாலாவ' என்னும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக. :.......................................

(ii) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

அம்மா சமைத்து முடித்துவிட்டாரா ? :..................................................................................................

● தரப்பட்டுள்ள புள்ளிக்கோடுகளில் விடைகளை எழுதுக.

**16.** 


வட்டத்தில் உள்ள நான்கு இலக்கங்களைப் பயன்படுத்தி அமைக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

:..............................


**17.** தரப்பட்டுள்ள எண்களை ஏறுவரிசையில் எழுதுக.

6508, 5302, 6805, 5230 :........................., ........................., ........................., ...........................

**18.** ஒரு சுற்றுலாவின் இறுதியில் எஞ்சியிருந்த 168 ரூபாயை ஒவ்வொரு பிள்ளைக்கும் 4 ரூபாய் வீதம் பிரித்துக் கொடுத்தால், சுற்றுலாவில் பங்குபற்றிய பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது ?

:..........................

**19.** (i) இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக.



:.................................

(ii) எண் கோலத்தில் உள்ள இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.

1, 3, 9, 27, .........


**20.** பெருக்கல் '✪' என்னும் குறியீட்டினாலும் வகுத்தல் '❋' என்னும் குறியீட்டினாலும் காட்டப்படுமெனின், 8 ✪ 6 ❋ 4 இன் பெறுமானம் யாது ?

:..........................

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



**21.** 


இந்த எண்சட்டத்தில்

(i) வகைகுறிக்கப்படும் எண்ணை இலக்கங்களில் எழுதுக.

:..................................

(ii) கோல் C இல் உள்ள மணிகளினால் வகைகுறிக்கப்படும் பெறுமானம் யாது?

:..................................

**22.** $2l\ 500ml$ பால் உள்ள பாத்திரத்தில் மேலும் $1l\ 750ml$ பால் ஊற்றப்பட்டது.

(i) பாத்திரத்தில் தற்போது உள்ள பாலின் அளவு லீற்றர், மில்லிலீற்றர் ஆகியவற்றில் எவ்வளவு ?

:......... $l$ .................$ml$


(ii) பாத்திரத்தில் உள்ள மொத்தப் பாலையும் ஒவ்வொன்றும் 250 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய எத்தனை போத்தல்களில் நிரப்பலாம் ?

:..................................

**23.** ஒரு பாடசாலையில் விளையாட்டு விழா முற்பகல் பத்து மணி முப்பது நிமிடத்திற்கு ஆரம்பித்தது. அது 4மணித்தியாலம் 45நிமிடத்திற்குப் பின்னர் முடிவடைந்தது. விளையாட்டு விழா முடிவடைந்த நேரத்தை இருபத்துநான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டும் விதத்தில் இலக்கங்களில் எழுதுக.


.......... :........... மணித்தியாலம்

**24.** 4.2 இல் இருந்து 1.5 ஐ பின்னோக்கிக் காட்டும் இடம் யாது ?





:..................................

**25.** இக்கடிகார முகத்தில் மணித்தியால முள்ளுக்கும் நிமிட முள்ளுக்கும் இடையே உள்ள கோணம் ஒரு செங்கோணமாக இருக்கும் நேரத்தைக் குறித்துக் காட்டுக.




**26.** உருவில் உள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையில் உள்ள வெற்றிடத்தை நிரப்புக.




| இருந்து | வரைக்கும் | தூரம் |
|---|---|---|
| கொழும்பு | அம்பாந்தோட்டை | 245 km |
| கொழும்பு | மாத்தறை | 160 km |
| காலி | அம்பாந்தோட்டை | 125 km |
| மாத்தறை | அம்பாந்தோட்டை | ........ km |

**27.** 2019 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் கண்ணனின் வயது 10 ஆண்டுகளும் 8 மாதங்களும் ஆகும். மயூரனின் வயது 13 ஆண்டுகளும் 6 மாதங்களும் ஆகும். இருவருடைய வயதுகளின் கூட்டுத் தொகையைக் காண்க.

:...........ஆண்டுகள் ............மாதங்கள்

**28.** ஒரு விவசாயி முதலாம் நாளில் 5kg 250g பயற்றங்காயையும் இரண்டாம் நாளில் 8kg 900g பயற்றங்காயையும் பிடுங்கினார். அவர் இரண்டு நாட்களிலும் பிடுங்கிய பயற்றங்காய்களின் மொத்த நிறை யாது ?

:.........kg .................g

Downloaded from:-www.paritchai.com

[பக். 5 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com



**29.** ஒரு பழக்கடையில் ஒரு நாளில் விற்கப்பட்ட பழங்கள் தொடர்பான தகவல்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளன.


(i) அத்தினத்தில் விற்கப்பட்ட அப்பிள் பழங்களின் எண்ணிக்கை 13 ஆகும். அதனை வரைபில் வரைந்து காட்டுக.

(ii) அதிகமாக விற்கப்பட்ட பழம் எது ?

:.....................................

(iii) அத்தினத்தில் விற்கப்பட்ட பழங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு ?

:.....................................




● **30** தொடக்கம் **59** வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

**30.** சித்திரைப் புத்தாண்டு காலத்தில் பூக்கும் தாவரங்கள் மாத்திரம் அடங்கியுள்ள விடையைத் தெரிவுசெய்க.
(1) அன்னமுன்னா, தாமரை, வேம்பு (2) முள்முருங்கை, நம்புட்டான், மா
(3) வேம்பு, முருங்கை, முள்முருங்கை (4) மா, பாலை, இலுப்பை

**31.** இலங்கைக்கேயுரிய தாவரம்
(1) கொய்யா (2) மாதுளை (3) நெல்லி (4) பெரும்பிரம்பு

**32.** வயல்களில் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை அழிக்கும் விலங்கு
(1) நத்தை (2) ஆந்தை (3) கொக்கு (4) மண்புழு

**33.** கிளைகளிலும் தண்டிலும் காய்கள் உண்டாகும் தாவரம்
(1) பலா (2) வெரலு (3) ஜம்பு (4) மங்குஸ்தான்

**34.** உப்பிடுவதன் மூலம் நீண்ட காலத்திற்கு பேணத்தக்க உணவு
(1) மரவள்ளி (2) பலாச்சுளை (3) எலுமிச்சை (4) பனங்கிழங்கு

**35.** போஞ்சியில் அதிகளவு உள்ள போசணைப் பதார்த்தம்
(1) புரதம் (2) மாப்பொருள் (3) கல்சியம் (4) விற்றமின்

**36.** கொள்ளை நோயைப் பரப்பும் பிராணி
(1) நுளம்பு (2) நாய் (3) ஈ (4) எலி

**37.** இலங்கையின் அமைவு பற்றிய பிழையான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) இந்தியாவிற்குத் தெற்கே இலங்கை அமைந்துள்ளது.
(2) இலங்கை இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள ஒரு தீவு.
(3) இலங்கைக்கு அருகே அமைந்துள்ள நாடு இங்கிலாந்து.
(4) இலங்கை ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்தது.

**38.** ஆபத்து ஏற்படுவதை உணர்ந்தவுடன் தனது உடலை பந்து வடிவில் சுருட்டிக்கொள்ளும் விலங்கு
(1) அட்டை (2) முள்ளம்பன்றி (3) மயிர்க்கொட்டி (4) ஆமடில்லா

**39.** நுகர்வுக்கான வர்த்தகப் பொருள்களின் தரத்தினை உறுதிப்படுத்தும் சர்வதேச இலச்சினை
(1) SLS (2) ISO (3) ISBN (4) SLDA

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



**40.** நிலத்தில் வளரும் புல்லினை சிரட்டையினால் மூடி வைத்துச் சில தினங்களின் பின்னர் பார்த்தபோது புல் மஞ்சள் நிறமடைந்திருந்தது. இவ்வாறு நிகழ்வதற்குக் காரணம்


(1) நீர் கிடைக்காமை.

(2) காற்று கிடைக்காமை.

(3) வளமான மண் கிடைக்காமை.


(4) சூரிய ஒளி கிடைக்காமை.

**41.** மிக இலகுவாக கல் ஒன்றைப் புரட்டுவதற்கு நெம்புகோல் பயன்படுத்தப்படும் மிகச் சரியான உருவைத் தெரிவுசெய்க.


(1)


(2)


(3)


(4)

**42.** பின்வரும் தொடர்பாடல் ஊடகங்களில் இலத்திரனியல் ஊடகம் எது ?

(1) செய்திப் பத்திரிகை (2) துண்டுப்பிரசுரம்

(3) சுவரொட்டி (4) தொலைக்காட்சி

**43.** காற்றைப் பயன்படுத்திச் செய்யப்படும் ஒரு வேலை **அல்லாதது**

(1) நெல்லிலிருந்து பதரை நீக்குதல்

(2) ஈரமான உடைகளை உலர்த்துதல்

(3) அடுப்பில் தீ மூட்டுதல்

(4) நீரைப் பனிக்கட்டியாக உறைய வைத்தல்

**44.** பச்சை நிறத்தைப் பெற்றுக்கொள்ள கலக்க வேண்டிய இரு நிறங்களும் எவை ?

(1) வெள்ளை + சிவப்பு (2) நீலம் + சிவப்பு

(3) நீலம் + மஞ்சள் (4) சிவப்பு + மஞ்சள்

**45.** யோத கால்வாயைக் கட்டிய மன்னன்

(1) மகாசேனன் (2) தாதுசேனன் (3) பண்டுகாபயன் (4) தேவநம்பியதீசன்

**46.** பின்வருவனவற்றுள் எது பாதுகாப்பான சந்தர்ப்பமாகும் ?

(1) வெள்ளம் ஏற்பட்டுள்ளபோது படகோட்டச் செல்லல்

(2) வீதியின் வலது புறத்தால் நடந்து செல்லல்

(3) பட்டாசு கொளுத்துதல்

(4) கத்தியைக் கையில் எடுத்துக்கொண்டு ஓடுதல்

**47.** சமூக விரோதச் செயல்கள் காரணமாக தமக்கும் தமது குடும்பத்துக்கும் ஏற்படும் இழப்பு **அல்லாதது**

(1) தண்டனைக்கு உள்ளாதல் (2) நற்பெயர் கெட்டுப்போதல்

(3) சுயகௌரவம் பாதிக்கப்படுதல் (4) சமூகத்தில் கீர்த்தி ஏற்படல்

**48.** யூன், யூலை, ஓகஸ்ட் மாதங்களில் மேற்கு வானில் பின்வரும் எவ் உடுக்கோலங்களை தெளிவாகக் காணலாம் ?

(1) தென்சிலுவை, கார்த்திகை ஆகியன

(2) விருச்சிகம், தென்சிலுவை ஆகியன

(3) வேட்டைக்காரன், கார்த்திகை ஆகியன


(4) கார்த்திகை, பெருங்கரடி ஆகியன

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



**49.** படத்தில் காட்டியுள்ள வீதிச் சைகையினால் கூறப்படும் செய்தி யாது ?



(1) முன்னால் இடப்பக்க வளைவு
(2) முன்னால் வலப்பக்க வளைவு
(3) வீதி முன்னால் ஒடுங்குகிறது.
(4) ஒடுக்கமான பாலம் முன்னால்

**50.** விபத்திலிருந்து தவிர்ப்பதற்கு இரவு வேளையில் பயணிக்கும் துவிச்சக்கர வண்டிக்கு அவசியமாக இருக்க வேண்டியன

(1) சேறு தடுப்பான், தைனமோ (2) ஆசனம், மணி
(3) தடுப்பு, ஆசனம் (4) தைனமோ, ரெயில் லைட்

**51.** அசுத்தமான நீரைப் பருகுவதால் ஏற்படக்கூடிய நோய்

(1) யானைக்கால் (2) டெங்கு (3) வாந்திபேதி (4) நீர்வெறுப்பு நோய்

**52.** தேசப்படத்தில் மலைகளைக் காட்டுவதற்கு பயன்படுத்தப்படும் நிறம்

(1) கறுப்பு (2) சிவப்பு (3) பச்சை (4) கபிலம்

**53.** வாக்காளர் இடாப்பின் பெயர்ப் பட்டியலின் பிரதியைப் பெறுவதற்கு செல்ல வேண்டிய இடம்

(1) பிரதேச செயலாளர் அலுவலகம்
(2) பொலீஸ் நிலையம்
(3) மாவட்டத் தேர்தல் ஆணையாளர் அலுவலகம்
(4) கிராம சேவகர் காரியாலயம்


**54.** நீரில் கரையாத பொருள்


(1) சீனி (2) உப்பு (3) மெழுகு (4) சுண்ணாம்பு


**55.** மரவேலைக் கூடத்தில் பயன்படுத்தப்படும் **இரண்டு** உபகரணங்கள்


(1) துருத்தி, சாவணம் (2) சீவுளி, வாள்
(3) அரிவாள், உளி (4) சுத்தியல், சாந்தகப்பை

**56.** பின்வரும் இசைக்கருவிகளில் நரம்புக்கருவி எது ?


(1)


(2)


(3)


(4)

**57.** இலங்கையில் முதலாவதாக அமைக்கப்பட்ட சர்வதேச விமான நிலையம் இருக்கும் இடம்

(1) கட்டுநாயக்கா (2) மத்தளை (3) வீரவில (4) இரத்மலானை

**58.** இலங்கைக்கு உன்னத சேவையை ஆற்றிய இப்படத்தில் காணப்படுபவர்



(1) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி
(2) அனகாரிக தர்மபால
(3) பண்டிதர் டபிள்யு. டீ. அமரதேவ
(4) கேர்ணல் ஒல்கொட்


Downloaded from:-www.paritchai.com

[பக். 8 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com



**59.** படத்தில் உள்ள ஆக்கத்தில் பந்து வட்ட வடிவில் சுழல்வதற்கான காரணம் யாது ?



(1) காந்தங்களின் ஒத்த முனைகள் ஒன்றை ஒன்று கவர்வதால்

(2) காந்தங்களின் ஒவ்வா முனைகள் ஒன்றை ஒன்று கவர்வதால்

(3) காந்தங்களின் ஒவ்வா முனைகள் ஒன்றை ஒன்று தள்ளுவதால்

(4) காந்தங்களின் ஒத்த முனைகள் ஒன்றை ஒன்று தள்ளுவதால்

**60.** நம் வாழ்வோடு இன்று கணனியும் இணைந்துவிட்டது. கணனி பற்றி அறியாதோர் மற்றும் கணனியை இயக்கத் தெரியாதோர் கால வெள்ளத்தால் ஒதுக்கப்பட்டு விடக்கூடிய சூழ்நிலை உருவாகி வருகின்றது. இனிவரும் காலங்களில் கணனியின் வளர்ச்சி மேலும் துரிதமாக விரிவடையும் என்பது உறுதியாகும். 'மனிதனுக்குத் துணைபுரியும் கணனி' என்னும் தலைப்பில் **மூன்று** வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

1. ..............................................................................................................

..............................................................................................................

2. ..............................................................................................................

..............................................................................................................

3. ..............................................................................................................

..............................................................................................................

❊❊❊

Downloaded from:-www.paritchai.com